முருகப்பெருமான் துணை

**மகான் கல்லுளிச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.01.2024,** வியாழக்கிழமை

1. ஏழாம்படை வீட்டு நாயகனே
ஏழ்மைதனை விரட்டவந்த தேசிகனே
காலனை வென்ற குருராஜனே
கந்தனாய் வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது சிலை திங்கள்
வரங்களென இருபானாற் திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 26 ம் நாள், 11.01.2024, வியாழக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை கல்லுளிச்சித்தர் யானும்
அறிவிப்பேன் உலகநலம் பெற
பசிபிணி அகற்றி மனுதர்மம்
பாதுகாக்க அவதாரம் எடுத்த
4. எடுத்தநல் அரங்க மகானின்
ஏழாம்படைவீட்டை அனுகி
இடர்வெல்லும் அருளமுது உண்டு
இணையில்லா சடாட்சர தீட்சை
5. தீட்சைதனை அரங்கஞானியரிடம்
தெய்வபலமாக மக்கள் ஏற்று
தீட்சைவழி செபதபம் கண்டு
தேசிகனாரின் தருமப் பணிகளை
6. பணிகளை ஏற்று சேவைதனை
பழுதின்றி செய்து வருக
கனிவேலவன் ஆசி அருள் கூடி
கருணைமிக்க ஞான வாழ்வாக

7. ஆகவே நிலைகள் உயர்ந்து
அனைவரும் அரங்கன் தேடலின்
யுகமாற்ற சக்திகளாக மாறுவர்
உயர்வான ஞானவான்கள் எனும்

8. எனும் அடையாளம் பெருகி
உலகமெங்கும் அரங்கனை ஏற்ற
ஞானவான்கள் எனும் படை
ஞானயுகம் படைக்கும் வண்ணம்

9. வண்ணமுடன் பெருகி மாற்றம்
வையகம் பாதுகாக்கும் படியாக
எண்ணம் தூய்மை நேர்மை
எல்லாம் சேவை வடிவே கொண்ட

10. கொண்ட ஆளுமை சக்திகளும்
குறைவிலா அதிகார வர்க்கங்களும்
தொண்டுவழி நல்கதிக்கு வந்து
தெரிவிப்பேன் அற்புதம் புரிவர்

11. அற்புதம் தரும் அரங்கன் ஞானமும்
அகிலம் மாற்றுவது உறுதி
ஏற்புகொண்ட தரும சேவையே
இவ்வுலகை சமநிலை புரிவது உறுதி

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–